# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ்
## பள்ளிவாயிலில் 16.12.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

நமது குழந்தைகள் மாஷா அல்லாஹ் மிகவும் சிறிய வயதிலேயே திருக்குர்ஆன் ஓதி முடித்து விடுகின்றனர். அவர்களின் தாய்மார்களுக்கு தமது குழந்தைகள் விரைவாக திருக்குர்ஆன் ஓதி முடிக்க வேண்டும் என்ற கவலை உள்ளது. அதற்காக மிகவும் உழைக்கின்றனர். பல்வேறு நாடுகளில் நான் செல்லும் போது பெற்றோர்கள் தமது குழந்தைகளை என்னிடம் குர்ஆன் ஓத வைத்து ஆமீன் விழாவை நடத்தினார்கள். ஆனால், ஒருமுறை திருக்குர்ஆனை ஓதி முடிக்க வைத்த பிறகு அதனைத் திரும்ப ஓதவும்; தொடர்ந்து ஓதவும் அவ்வளவாக முயற்சி செய்யப்படுவதில்லை. ஒருமுறை திருக்குர்ஆனை ஓதி முடிக்க வைப்பதற்கு செய்யப்படும் முயற்சி தொடர்ந்து ஓத வைப்பதில் இருப்பதில்லை. நான் பொதுவாக அவர்களிடம் நீங்கள் தொடர்ந்து திருக்குர்ஆன் ஓதுகிறீர்களா? இல்லையா? என்று கேட்கும் போது சிலர் படிப்பதை வைத்தும் என்னால் அதனை மதிப்பிட முடிகிறது. தொடர்ச்சியாக குர்ஆன் ஓதுவது குறித்து திருப்திகரமான பதில் கிடைப்பதில்லை. தாய்மார்களோ ஒருமுறை ஓதி முடித்த பிறகும் குழந்தைகளை கண்காணித்திருக்க வேண்டும். குழந்தைகளிடம் முறைப்படி தொடர்ந்து ஓதும் பழக்கத்தை உருவாக்க முயற்சி எடுத்திருக்க வேண்டும். நமது கவலையெல்லாம் ஒருமுறை குர்ஆன் ஓதி முடிக்க வைப்பதுடன் நின்று விடக் கூடாது. மாறாக பிறகும் கூட தொடர்ந்து அதனை கண்காணித்து வர வேண்டும். நிச்சயமாக ஒருமுறை திருக்குர்ஆனை ஓதி முடிக்க வைப்பதும் மிக முக்கிய பணிதான். சில பெற்றோர்கள் 4 – 5 வயதிலேயே குழந்தைகளை திருக்குர்ஆன் ஓதி முடிக்க வைக்கின்றனர். நிச்சயமாக இது உழைத்து செய்ய வேண்டிய பணிதான். ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று இதனை நிரந்தரமாகக் கண்காணித்து வருவது இன்னும் அதிக அவசியமான ஒன்றாகும்.

கடந்த சில நாட்களுக்கு முன் ஒரு பெண்மணியின் கடிதம் எனக்கு கிடைத்தது. அதில் எனது தாயாரைப் பற்றி குறிப்பிட்டிருந்தார். அதில் என்னிடம் கூறியிருந்தார். இன்று வரை நான் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். ஒருமுறை நான் எனது பிள்ளையை அழைத்துக் கொண்டு (ஹுஸூர் அவர்களின் தாயார்) அவர்களிடம் சென்றிருந்தேன். எனது பிள்ளை திருக்குர்ஆன் ஓதி முடித்திருந்தது. இந்த குழந்தை ஆறு வயதில் திருக்குர்ஆனை ஓதி விட்டது என்று நான் மிகவும் பெருமையுடன் அவர்களிடம் கூறினேன். 5 அல்லது 6 வயதில் திருக்குர்ஆனை ஓதி முடிப்பது பெரிய விஷயமல்ல. இந்த குழந்தையின் உள்ளத்தில் திருக்குர்ஆன் மீது எவ்வளவு அன்பை உருவாக்கியுள்ளீர்கள் என்று அவர்கள் என்னிடம் கேட்டார்கள். உண்மையில் திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பதுடன் திருக்குர்ஆன் மீது அன்பை உருவாக்குவதும் மிக அவசியமாகும். அப்போதுதான் குழந்தைக்கு சுயமாக அதனை ஓதுவதற்கு ஆர்வம் ஏற்படும். எந்தக் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோமோ அதில் குழந்தைகளுக்கு பல்வேறு மனம் கவரும் விஷயங்கள் காணப்படுகின்றன. டி.வி., இன்டர்நெட், மற்ற புத்தகங்களின் மீதுள்ள இரசணைகளுக்கிடையில் குழந்தைகள் சுயமாகவே சுபுஹ் வேளையில் திருக்குர்ஆன் ஓதும்போது அது அவர்களிடம் திருக்குர்ஆனின் முக்கியத்துவம் குறித்து ஓர் உணர்வை ஏற்படுத்தும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூட இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். இக்காலத்தில் மனம் கவரும் பல விஷயங்களும் பல்வேறு புத்தகங்களும் உள்ளன. பல்வேறு அறிவுகளும் வெளி வருகின்றன. இக்காலத்தில் திருக்குர்ஆன் ஓதுவதன் முக்கியத்துவம் இன்னும் அதிகமாகிறது. எப்போதும் கவனம் செலுத்தவும் வேண்டும். அதனைப் படிப்பதன் பக்கம் இன்னும் அதிகம் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

பெற்றோர் திருக்குர்ஆனை ஓதி, அதனை சிந்தித்துக் கொண்டிருக்கும் பழக்கம் இருந்தால் தான், அதனைப் படிப்பதில் கவனம் செலுத்தினால் தான் குழந்தைகளிடம் திருக்குர்ஆன் ஓதுவதில் கவனம் ஏற்படும்.

வீட்டில் சுபுஹ் தொழுகைக்குப் பிறகு தற்போது குளிர்காலம் என்பதால் சற்று தாமதமாகவே சுபுஹ் நேரம் வருகிறது. எனவே சற்று துரிதமாக பணிக்காக வெளியேற வேண்டியிருப்பவர்கள் தொழுகைக்கு முன்பே முறைப்படி தொடர்ந்து குர்ஆன் ஓதி வர வேண்டும். இதனால் குழந்தைகளிடமும் கவனம் ஏற்படும். திருக்குர்ஆனால் வீடு பரக்கத்தால் நிரம்பும். பிறகு ஒரு மூஃமினிடம் இருக்க வேண்டிய நன்மைகளைச் செய்யத் தொடங்கும். இவ்வாறு திருக்குர்ஆனின் மகத்துவம் உள்ளத்தில் வளர்ந்து கொண்டே செல்லும். நம்மில் ஒவ்வொருவரும் அதனைக் காணலாம். நாம் திருக்குர்ஆனை சிந்தித்து ஓதி வந்தால் வீட்டில் கணவன் மனைவிக்கு இடையில் இறைவனுக்காக அன்பு காணப்படும். அதனால் குழந்தைகளும் ஜமாஅத்தின் ஒரு பயனுள்ள அங்கமாக இருப்பர். அவர்களின் தர்பிய்யத்தும் மிக உயரிய முறையில் ஏற்படும். இதனை ஓர் அஹ்மதி தனது வாழ்வின் அங்கமாக்குவதற்கு முழுமையாக கவனம் செலுத்தி முயற்சி செய்ய வேண்டும். இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனை உருவாக்கவே பெரிதும் முயன்றார்கள். அவர்களின் வருகையின் நோக்கமும் இதுவேயாகும். அல்லாஹ் நம்மை திருக்குர்ஆனுக்கு எல்லாவற்றையும் விட உயரிய அந்தஸ்து வழங்குபவர்களாக ஆக்குவானாக! அவர்களுக்கு இதனை விட கண்ணியத்திற்குரியது எதுவுமே இல்லாமல் ஆகி விட வேண்டும். திருக்குர்ஆனுக்கு, நமது ஜமாஅத்திற்கு வெளியில் இருப்பவர்கள் தருவது போன்று கண்ணியம் தந்தால் போதாது. அழகான உறையிலிட்டு அழகான அலமாரியில் வைத்து விட்டார்கள். அழகானப் பெட்டியில் வைத்து விட்டார்கள். திருக்குர்ஆனுக்கு தரப்படும் அசல் கண்ணியம், பிரியம் எல்லாம் அதன் கட்டளையின்படி செயல்படுவதில் பரிபூரணமாக முயற்சி செய்வதில் தான் உள்ளது. அதன் ஏவல் விலக்கல்களை தமது வாழ்வின் அங்கமாக்குவதில் உள்ளது. இறைவன் தடுத்தவற்றிலிருந்து மனிதன் தன்னை தடுத்துக் கொள்வதில் உள்ளது. செய்யுமாறு கட்டளையிட்டப்பட்ட விஷயங்களைச் செய்வதற்காக தனது எல்லா ஆற்றல்களையும் பயன்படுத்தவதில் உள்ளது. இறைவனின் பயத்தை உள்ளத்தில் கொண்டவாறு அதனை ஓதுவதில் உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது நூல்களில் எண்ணற்ற இடங்களில், தனது சபைகளில், மல்ஃபூஸாத்தில் திருக்குர்ஆனின் முக்கியத்துவத்தை விளக்கியுள்ளார்கள். இதனைப் பற்றி தமது எதிர்பார்ப்பைக் கூறியுள்ளார்கள். ஒரு பைஅத் செய்த அஹ்மதியிடம் தாம் எதிர்பார்ப்பது என்ன என்பதைப் பற்றி கூறியுள்ளார்கள. நாம் நமது வீடுகளை திருக்குர்ஆன் திலாவத்தினால் நிரப்ப வேண்டும். மேலும் ஓதுவதுடன் அதன் மொழிபெயர்ப்பையும் படிப்பது அவசியமாகும். அப்போதுதான் அதன் கட்டளைகள் விளங்கும். வீடுகளில் குழந்தைகளுக்கு முன்னால் திருக்குர்ஆன் ஓதுவதுடன் அதனை புரிவதற்கு அது குறித்த தர்ஜுமாவின் உரையாடல்களும் முயற்சியும் தேவை. வெறும் திலாவத் செய்யும் வழக்கம் மட்டும் இருந்தால் போதாது. மாறாக திருக்குர்ஆனின் பொருளை எடுத்துச் சொல்லும் சிறு சிறு சபைகள் நடத்த வேண்டும். அவர்களிடம் அதனால் ஓர் ஆர்வம் ஏற்படும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொழுகை மற்றும் திருக்குர்ஆனின் பொருளைப் படிப்பதும், புரிவதும் மிகவும் அவசியமானதாகக் கருதினார்கள். ஆனால் வெறுமனே தர்ஜுமாவை மட்டும் படித்துக் கொண்டு அசல் சொல்லை ஓதாமல் விட்டு விடுவதற்கு அனுமதியில்லை.

**அன்னார் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனின் தர்ஜுமாவை மட்டும் படிப்பதற்கு நாம் ஒருபோதும் அனுமதி தர மாட்டோம். அவ்வாறு செய்வதால் திருக்குர்ஆனில் அற்புதம் மறுக்கப்படுகிறது. தர்ஜுமாவைப் படிப்பது மட்டுமே போதுமானது என்று கூறுபவர் உலகில் திருக்குர்ஆனை இல்லாமல் ஆக்க விரும்புகிறார். திருக்குர்ஆனின் அற்புதம் அதன் அசல் நிலையில்தான் உள்ளது. அதுவே அதன் அற்புதமாகும். அதுவே இறைவனது அறிவிப்பு ஆகும்.

*இன்னா நஹ்னு நஸ்ஸல்ன ஸிக்ர வஇன்னா லஹூ ல் ஹாஃபிளூன் - நாம் இந்தத் திக்ரை இறக்கினோம். நாமே இதனை பாதுகாப்போம். (15:10)*

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ள இந்த அற்புதம் அசல் அரபிச் சொல்லின் மூலம் மட்டுமே இன்று வரை உள்ளது. மிகக் கடும் ஆட்சேபணையாளர்கள் இஸ்லாமிய எதிரிகள் கூட திருக்குர்ஆன் அதன் அசல் வடிவத்தில் அசல் நிலையில் இன்று வரை உள்ளது என்பதை ஒப்புக் கொள்ளாமல்

இருக்க முடியவில்லை. தர்ஜுமாவை மட்டுமே முற்றிலும் சார்ந்திருந்து விட்டால் தர்ஜுமா ஒன்று மற்றொன்றை விட்டு வேறுபட்டு இருப்பதை நாம் பார்க்கிறோம். இன்னும் சொல்வதாயின் நாம் நமது தர்ஜுமாவை உலகின் முன் வைக்கிறோம். நமது தர்ஜுமா முற்றிலும் மாறுபட்டது என்றும் ஒப்புக் கொண்டுள்ளோம். மற்றவர்களோ சரியான தர்ஜுமாவை எழுதவில்லை. இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்யும் பெரும் பாதிரி ஒருவர் அமெரிக்காவில் தர்ஜுமாவை மட்டும் வைத்துக் கொண்டு Text ஐ எடுக்காமல் இஸ்லாம் இவ்வாறு கூறுகிறது; இவ்வாறு கூறுகிறது என்று ஆட்சேபனை செய்து வந்தார். அவரிடம் நாம் நமது விளக்கவுரையை அனுப்பினோம். அதனைப் படித்த பிறகு நான் எழுதியுள்ள பொருளும் கூட முஸ்லிம்கள் எழுதியதுதான் என்று அவர் கூறினார்.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மட்டும்தான் மொழிபெயர்ப்பையும் கூட அசல் அரபி வாசகத்திற்கு நெருக்கமாக வழங்கினார்கள். சரியான பொருளையும், ஞானத்தையும் கற்பித்தார்கள். இதனைத் தொடர்ந்து நான் இன்னொன்றையும் கூறுகிறேன். கடந்த நாட்களில் அஹ்மதிகளின் மீது ஆட்சேபனை செய்பவர் ஒருவரின் ஆட்சேபனை ஒன்று என் பார்வையில் பட்டது. அதில் அவர் கூறியிருந்தார். மிர்ஸா சாஹிப் நபியாக இருந்தார். பிறகு அவர் ஏன்? தனது ஜமாஅத்தைப் பார்த்து இமாம் அபூஹனீஃபாவைப் பின்பற்றுங்கள் என்று கூறினார். அதற்குப் பதிலாக நமது பதில் வந்துள்ளது. அவரைப் பின்பற்றுங்கள் என்று நிச்சயமாக எங்கும் கூறவில்லை. ஆனால் திருக்குர்ஆன் தொடர்பாக இது குறித்து கூறினார்கள். ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சபையில் கூறினார்கள். ஹனஃபி மத்ஹபில் திருக்குர்ஆன் தர்ஜுமாவை மட்டும் படிப்பது போதுமானது என்று உணரப்படுகிறது. இது ஹஸ்ரத் இமாமே அஃஸம் உடைய மார்க்கமாக இருக்கும் எனில் அது தவறாகும். நிச்சயமாக அவர் இமாம் ஆவார். இஸ்லாத்திற்கு பெரும் தொண்டு செய்துள்ளார்கள். பல மார்க்கச் சட்டப் பிரச்சனைகளைச் சரியாகக் கூறியுள்ளார்கள். ஆனால், அன்னார் தர்ஜுமா மட்டும் படிப்பது போதுமானது என்று கூறுவார்கள் என்றால் அது தவறாகும்.

எவ்வாறிருப்பினும் அல்லாஹ் திருக்குர்ஆனின் அசல் சொற்களை பாதுகாப்பதற்கான வழியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பினான். அவர்கள் தமது ஜமாஅத்தை திருக்குர்ஆனைப் படிக்கவும் அதன் மீது அன்பு செலுத்தவும் எண்ணற்ற இடங்களில் வலியுறுத்தியுள்ளார்கள்.

**அன்னார் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:** திருக்குர்ஆன் வானத்துச் சட்டமும் ஈடேற்றத்தின் ஊடகமும் ஆகும். ஓரிடத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய மரணம் குறித்து அன்னார் விளக்குமிடத்து கூறுகிறார்கள். திருக்குர்ஆன் மூலம் ஈஸா (அலை) அவர்களுடைய வஃபாத்தை நிரூபிப்பதற்காக அன்னார் அவ்வாறு கூறியுள்ளார்கள். ஆனால் இது ஒரு பொதுவான இலக்கணமுமாகும். திருக்குர்ஆன் ஒரு வானத்துச் சட்டமாகும். அதன் அடிப்படையில் அது ஈடேற்றத்தின் ஊடகமும் ஆகும். நாம் இவ்வுலகிலும் பார்க்கிறோம். உலகச் சட்டங்களும் கூட இயற்றப்படுவதால் மட்டுமே பயன் தந்து விடுவதில்லை. அதனை அமல்படுத்தாதவரை பயன் தருவதில்லை. அதுபோன்று திருக்குர்ஆனின் சட்டமும் அமல் செய்யப்படும் போதுதான் பயனளிப்பதும், ஈடேற்றத்தின் ஊடகமாகவும் ஆகிறது. அமல் செய்யப்படவில்லை எனில் ஈடேற்றத்தின் ஊடகமாக இருக்காது. வெறுமனே படித்து விட்டு அமல் செய்யாமல் விட்டால் ஈடேற்றம் கிடைக்காது. இறைவனின் திருப்தி கிடைக்காது. இறைவனின் நிஃமத் மற்றும் வெகுமதிகளுக்கு நாம் வாரிசாக முடியாது. திருக்குர்ஆனின் போதனைகளை வழங்குவது மற்றும் அதன்படி அமல் செய்வது மிகவும் அவசியமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

நினைவில் கொள்ளுங்கள். திருக்குர்ஆன் உண்மையான பரக்கத்தின் தலையூற்று மற்றும் ஈடேற்றத்தின் ஊடகம் ஆகும்.

திருக்குர்ஆனின் மீது அமல் செய்யாதது அம்மக்களின் தவறாகும். அம்மக்களுள் ஒரு பிரிவு அதனை நம்பவில்லை. அதனை இறை வார்த்தையாகக் கருதவில்லை. அவர்கள் மிகவும் வெகு தொலைவில்

உள்ளனர். ஆனால் ஈமான் கொண்டவர்களுக்கு இறைவனின் வேதம் நிவாரணம் தரும் மருந்து ஆகும். அவர்கள் இதன்படி அமல் செய்யாவிட்டால் அது எத்துணை வியப்புக்கும் பரிதாபத்திற்கும் உரிய விஷயம்!

அவர்களுள் சிலர் வாழ்நாள் முழுவதும் அதனைப் படித்துப் பார்த்ததே இல்லை. அத்தகையோர் இறைவனது வார்த்தையை பொருட்படுத்தாதவர்; கவனமற்றவர். அவரது உதாரணம் ஒரு மனிதன், இன்ன ஊற்று மிகவும் பரிசுத்தமாக்கக்கூடியது மற்றும் இனிமையானது; பல நோய்களுக்கு அருமருந்து என்று அறிகிறார். அவருக்கு அது குறித்து உறுதியாக அறிவு உள்ளது. அப்படி அறிந்திருந்தும், தாகம் இருந்தும், பல நோய்களால் அவர் பீடிக்கப்பட்டிருந்தும் அந்த நீரூற்றின் பக்கம் செல்லவில்லை. இது அவருக்கு எத்தகைய பேரிழப்பு! அறியாமை! அவர் அந்த நீரூற்றில் வாய் வைத்து அருந்தியிருக்க வேண்டும். நிவாரணம் தரும் அந்த இனிய நீரைச் சுவைத்திருக்க வேண்டும். தெரிந்திருந்தும் தெரியாதவரைப் போன்று விலகியியிருந்து விட்டார்.

அல்லாஹ் நம்ம இந்த படிப்பினை நிறைந்த தூதுச் செய்தியைப் புரிந்து திருக்குர்ஆனின் போதனையின்படி அமல் செய்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! அதனைப் புரிந்து கொள்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! நமது பைஅத்திற்குரிய கடமை அந்நிலையில் தான் நிறைவேறும். நாம் திருக்குர்ஆனின் போதனையை நம் மீது போட்டுக் கொள்ளும்போது தான் முடியும்.

திருக்குர்ஆனின் போதனையானது ஏற்கனவே கூறப்பட்டது போன்று திருக்குர்ஆனில் விலக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தீமையிலிருந்தும் விலகுதல், அதில் விளக்கப்பட்ட ஒவ்வொரு நன்மையையும் கடைபிடித்தல், கடைபிடிக்க முழுமையாக முயலுதல் ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன் தீமையை விட்டு விலகிக் கொண்டு நாம் முழுமையான மனிதனாகி விட்டோம் என்று நினைத்துக் கொள்ள வேண்டும் என்பது திருக்குர்ஆனின் போதனை அன்று. அது மனிதனை மிக உன்னத நல்லொழுக்கங்களை உடையவனாக்க விரும்புகிறது. மனித குலத்திற்கு நன்மையும் அனுதாபமும் காட்டத்தக்க செயல்கள் அவனிடமிருந்து வெளிப்பட வேண்டும். அதன் விளைவாக அல்லாஹ் அவனிடம் திருப்தி கொள்ள வேண்டும் என்று விரும்புகிறது.

எனவே ஒரு மூஃமினுக்கு திருக்குர்ஆனின் மீது உண்மையான பிரியம் இருக்கும் எனில், அவர் இந்த தகுதியை அடைய தாமும் முயன்று, தமது குழந்தைகளையும் அதன் பக்கம் எடுத்துச் செல்ல முயற்சி செய்வார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

விஷமம் மற்றும் தீமையிலிருந்து விலகி இருப்பது மட்டுமே முழுமையாகி விடாது. அது மட்டுமே நமது இலக்காகி விடக்கூடாது. நமது இலக்கை உயர்வாக வைத்திருக்க வேண்டும். அதற்கு முயற்சி செய்ய வேண்டும். திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள எல்லா வகையான நன்மைகளையும் தம் மீது கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறான முயற்சி ஒவ்வொரு ஆண், பெண் மற்றும் குழந்தைகளிடமும் உருவாகி விட்டால் ஒரு தூய சமுதாயம் உருவாகி விடும். இஸ்லாம் நிலைநாட்ட விரும்புகின்ற சமுதாயம் உருவாகும். இக்காலத்தில் திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்களின் வாயும் அடைபட்டு விடும். இங்கு இஸ்லாத்தின் சட்டங்களுக்கு எதிராக ஆட்சேபனைகளைச் செய்யும் விஷயத்தில் இரண்டு பெண்கள் பிரபல்யமாக இருக்கின்றனர். பல்வேறு சொற்பொழிவுகள் அதனையொட்டி நடக்கின்றன. இஸ்லாமிய சட்டங்கள் மீது ஆட்சேபிப்பது எல்லை கடந்துள்ளது.

கடந்த நாட்களில் யூ.கே. குத்தாமுல் அஹ்மதிய்யாவின் முயற்சியால் அவர்களுடன் University College, London –ல் ஒரு விவாதம் நடந்தது. அந்த யுனிவர்சிட்டி அமைப்பு இந்த விவாதத்தை ஏற்பாடு செய்திருந்தது. அதில் அந்த இரு பெண்கள் தமது தரப்பிலிருந்து தமக்குரிய பாணியில் ஆட்சேபனைகளை வீசினர். ஆனால் நமது இரண்டு குத்தாம்களில் ஒருவர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர். நமது ஜாமிஆவில் படிப்பவர். அடுத்தவர், புதிய அஹ்மதியான ஆங்கிலேயர் ஆவார். இருவரும் திருப்திகரமான

ஆதாரப்பூர்வமான பதிலை திருக்குர்ஆனிலிருந்து, திருக்குர்ஆனின் போதனைகளுக்கு ஏற்பவும், இஸ்லாமிய போதனைகளுக்கேற்பவும் வழங்கினார்கள். இது அவர்களைக் கோபமடையச் செய்தது. அவர்கள் இவ்வாறு கோபத்தால் படபடவென ஆட்சேபனை செய்வதைக் கண்டு அவர்களது ஆதரவாளர்கள் கூட பரிதாபப்பட்டனர். அல்லாஹ்வின் அருளால் அஹ்மதி இளைஞர்கள் மூலமாக அவ்விடத்தில் இஸ்லாத்திற்கு வெற்றி கிடைத்தது; இஸ்லாமிய போதனைக்கு வெற்றி கிடைத்தது.

நாம் திருக்குர்ஆனை விளங்குவதற்கு மிகவும் முயற்சி செய்ய வேண்டும். அதன்படி அமல் செய்ய முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நமது வீடு சொர்க்கத்தின் முன்மாதிரியாகும். நமது சமுதாயத்திலும், சுற்றுப்புறத்திலும் அப்போது தான் தப்லீகின் கடமையை நிறைவேற்றியவர் ஆவோம்.

திருக்குர்ஆனைத் திலாவத் செய்யும் முறையைக் கற்பித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். திருக்குர்ஆனை ஆர்வமுடன் சிந்தித்துப் படிக்க வேண்டும்.

ஹதீஸில் வருகிறது: அநேக காரிகள் (திருக்குர்ஆனை முறைப்படி ஓதுபவர்கள்) உள்ளனர். அவர்கள் மீது திருக்குர்ஆன் சாபம் அனுப்புகிறது. ஒருவர் குர்ஆனைப் படித்து அமல் செய்யவில்லை என்றால் திருக்குர்ஆன் அவர் மீது லஃனத்தை அனுப்புகிறது. திலாவத் செய்யும் போது ரஹ்மத்தைப் பற்றி வந்தால், அங்கு இறைவனிடம் ரஹ்மத்தை கேட்க வேண்டும். ஏதாவது ஒரு சமுதாயத்தின் தண்டனை பற்றி குறிப்பிடப்படும் இடத்தை ஓதும் போது இறைவனிடம் இறை தண்டனையிலிருந்து அடைக்கலம் தேட வேண்டும். சிந்தித்து நிதானமாகப் படிக்க வேண்டும். அதன்படி அமல் செய்ய வேண்டும். அதன் முக்கியத்துவம் தெரிந்தால் மட்டுமே இந்நிலை உருவாக முடியும். அதனுடன் சிறப்பான தொடர்பு இருக்க வேண்டும். திருக்குர்ஆனின் மீது ஒரு முக்கியத்துவத்தை நமது உள்ளத்தில் உருவாக்க வேண்டும்.

சிலர் திருக்குர்ஆனைப் புரிவது கஷ்டம் என்று சாக்குபோக்குகளைக் கூறுவது குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

சில அறிவற்றவர்கள் எம்மால் திருக்குர்ஆனை விளங்க முடியாது. எனவே அதன் மீது கவனம் செலுத்த வேண்டாம் என்று கூறுகிறார்கள். இது மிகவும் சிக்கலானது. அது அவர்களின் தவறாகும். திருக்குர்ஆன் கொள்கைரீதியான விஷயங்களை மிகவும் விளக்கமாக எடுத்துரைத்துள்ளது. அது ஈடிணையற்றது. அதன் சான்றுகள் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்த வல்லமை உள்ளவை. திருக்குர்ஆன் எத்துணை பொருட்செறிவு மிக்கது எனில் முற்றிலும் கல்வி அறிவற்ற அரபிகளுக்குக் கூட புரிய முடிந்தது. பிறகு எப்படி? அதனை முடியாது என்று கூற முடியும்.

இக்காலத்தில் நம் மீது இறைவன் செய்த பெரும் அருளால் – நம்மீது பேரருள் செய்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பினான். அவர்கள் நமக்கு வெளிப்படையான கட்டளைகளை மட்டும் கூறவில்லை. மாறாக ஆழமான தத்துவங்களையும் திருக்குர்ஆனின் ஞானங்களையும் விளக்கினார்கள். வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூபிஹிம் (இவர்களுடன் சேராத பின்னுள்ளவர்களிலிருந்து அவரை அனுப்புவான்) உடைய அருளை நம் வரை கொண்டு சேர்த்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தந்த அந்த கருவூலத்திலிருந்து வைரங்களைத் திரட்ட நாம் முயற்சி செய்ய வேண்டும். நாம் அதன் மீது உண்மையான அன்பு வைக்காதவரை அவ்வாறு ஆக முடியாது. உலகில் பெரும்பாலார் ஜமாஅத்திற்கு வெளியிலுள்ள முஸ்லிம்கள் ஆவர். அவர்களின் கிராஅத் மிக நன்றாக இருக்கிறது. பெரும் பரிசுகளைப் பெறுகின்றனர். அவர்களது பதிவுகளைக் கொண்ட கேசட்டுகள் வருகின்றன. அந்த நல்ல கிராஅத்தை உடையவர்களுள் சிலருக்கு திருக்குர்ஆனின் பொருள் தெரியாது. ஏன் பெரும் உலமாக்களுக்கும் கூட பொருள் தெரியவில்லை. அதனால் தான் மிக நீண்ட காலமாக நாஸிக் மன்சூக் (மாற்றிய வசனம் மாற்றப்பட்ட வசனம்) என்ற விவகாரம் இருந்து கொண்டிருக்கிறது. இப்போதும் கூட சில வசனங்களில் பொருள்கள் இவர்களுக்கு தெரிவதில்லை. அவற்றில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய மரணம் தொடர்பான விஷயமும் ஒன்று. எவ்வாறிருப்பினும் அதன் பொருளைக் குறித்து அவர்கள் அறியாமல் உள்ளனர். அது குறித்து ஒரு எச்சரிக்கையூட்டும் ஹதீஸ் உள்ளது.

**ஹஸ்ரத் அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

ஒரு காலம் வர உள்ளது. திருக்குர்ஆனை திலாவத் செய்யக் கூடியவர்களுள் எம்மை விட சிறந்த காரி யார்? என்று மார்தட்டுபவர்கள் உருவாகுவார்கள். எம்மை விட பெரிய ஆலிம் யார்? என்று மார்தட்டுவார்கள். பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) சஹாபாக்களிடம் கேட்டார்கள். அத்தகையவர்களிடம் நீங்கள் ஏதாவது நல்ல விஷயத்தைக் காட்ட இயலுமா? சஹாபாக்கள் கூறினர். ஒருபோதும் இல்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அத்தகைய மக்கள் இதே உம்மத்தில் இருந்து உருவாகுவார்கள். ஆனால் அவர்கள் நரக நெருப்பின் விறகாக இருப்பார்கள்.

ஆகவே அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாகக்கூடிய இறை நெருக்கத்தை பெற்றுத் தருகின்ற நரக நெருப்பிலிருந்து காப்பாற்றுகின்ற அசல் விஷயம் பணிவுடன் திருக்குர்ஆனின் போதனையைப் புரிந்து அதன்படி அமல் செய்வதுதான். அதனை தொழிலாக்குவதல்ல. மாறாக அதன் மீது அன்பு கொள்ள வேண்டும். இன்று அஹ்மதிகளாகிய நமது ஒவ்வொருவரின் கவனமும் அதன் மீது இருப்பது கடமையாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். கிஷ்தி நூஹ் –ல் கூறுகின்றார்கள். எச்சரிக்கையாக இருங்கள். இறைவனது போதனையான திருக்குர்ஆனின் வழிகாட்டலுக்கு எதிராக ஓர் அடி கூட வைக்காதீர்கள். நான் உங்களிடம் உண்மையாகவே கூறுகிறேன்.

எவர் திருக்குர்ஆனின் 700 கட்டளைகளில் ஒரு சிறு கட்டளையைக் கூட விட்டு விட்டாரோ அவர் ஈடேற்றத்தின் வாசலை தனது கையாலேயே அடைத்துக் கொள்கிறார். உண்மையான இரட்சிப்பின் வழியை திருக்குர்ஆனே திறந்தது. மற்ற அனைத்தும் அதன் நிழலே. எனவே நீங்கள் திருக்குர்ஆனைச் சிந்தித்துப் படியுங்கள். அதன் மீது மிகவும் அன்பு கொள்ளுங்கள். எதன் மீதும் கொள்ளாத அன்பு கொள்ளுங்கள். ஏனெனில் இறைவன் என்னை விளித்துக் கூறினான்.

அல்கைரு குல்லுஹு ஃபில் குர்ஆன் (எல்லா வகையான நன்மைகளும் குர்ஆனில் உள்ளன). இதுவே உண்மையாகும். அம்மக்களின் மீது பரிதாபம்! அவர்கள் மற்றவற்றிற்கு அதனை விட முன்னுரிமை தருகின்றனர். உங்களது அனைத்து வெற்றிகளும், ஈடேற்றத்தின் தலையூற்றும் குர்ஆனில்தான் உள்ளது. திருக்குர்ஆனில் இல்லாத எந்த மார்க்கமும் உங்களுக்குத் தேவையில்லை. உங்களது ஈமானை கியாமத்து நாளில் உண்மைப்படுத்தக்கூடியது அல்லது பொய்ப்பிக்கக்கூடியது குர்ஆனே ஆகும். திருக்குர்ஆனைத் தவிர வானத்தின் கீழ் உங்களுக்கு நேரடியாக நேர்வழி காட்டக்கூடிய எந்த வேதமும் இல்லை. திருக்குர்ஆனாகிய ஒரு வேதத்தை உங்களுக்கு அருளியதன் மூலம் இறைவன் உங்கள் மீது கருணை காட்டியுள்ளான்.

நான் உண்மையாகக் கூறுகின்றேன். உங்களிடம் படித்துக் காட்டப்பட்ட இந்த வேதம் கிறித்தவர்களிடம் இறக்கப்பட்டிருந்தால் அவர்கள் அழிந்து போயிருக்க மாட்டார்கள். தவ்ராத்திற்குப் பதில் யஹுதிகளுக்கு, உங்களுக்கு வழங்கப்பட்ட இந்த வேதம் வழங்கப்பட்டிருந்தால் அவர்களுள் சில பிரிவினர் கியாமத்தை மறுத்திருக்க மாட்டார்கள். ஆகவே உங்களுக்கு தரப்பட்ட இந்த நிஃமத்திற்கு கண்ணியம் அளியுங்கள். இது மிகவும் அன்புக்குரிய நிஃமத் ஆகும். இது பெரும் செல்வமாகும். திருக்குர்ஆன் வராவிட்டால் இவ்வுலகம் ஒரு அசுத்தமான பொருள் போன்று ஆகியிருக்கும். திருக்குர்ஆனுக்கு எதிரில் எல்லா வழிகாட்டல்களும் ஒன்றுமற்றவை.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உங்களுக்கு ஒரு முக்கிய போதனையாவது திருக்குர்ஆனை கைவிடப்பட்ட ஒன்றைப்போன்று விட்டு விடாதீர்கள். அதிலேயே உங்கள் வாழ்வு உள்ளது. எவர் திருக்குர்ஆனுக்கு கண்ணியம் அளிப்பாரோ அவர் வானத்தில் கண்ணியம் பெறுவார். எவர் ஹதீஸ் மற்றும் ஒவ்வொரு கூற்றையும் விட திருக்குர்ஆனுக்கு முதன்மை வழங்குவாரோ அவருக்கு வானத்தில் முதன்மை வழங்கப்படும். திருக்குர்ஆனைத் தவிர மனித

குலத்திற்கு இப்பூமியில் எந்த வேதமும் இல்லை. ஆதமின் மக்கள் அனைவருக்கும் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைத் தவிர ஒரு ரஸுலும் இல்லை; பரிந்துரை செய்பவரும் இல்லை. எனவே இந்த கம்பீரமிக்க நபியின் மீது உண்மையான அன்பு கொள்ள முயற்சி செய்யுங்கள். வேறு எவருக்கும் அவரை விட சிறப்பு வழங்காதீர்கள். அதன் மூலமே நீங்கள் வானத்தில் ஈடேற்றம் பெற்றவராக எழுதப்படுவீர்கள்.

நினைவில் கொள்ளுங்கள். ஈடேற்றம் என்பது மரணத்திற்குப் பிறகு வெளிப்படும் ஒன்றல்ல. உண்மையான ஈடேற்றம் இவ்வுலகிலேயே அதன் வெளிச்சத்தைக் காட்டும். ஈடேற்றம் பெற்றவர் யார்? அவர், இறைவன் உண்மை என்று உறுதிகொண்டு ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் எல்லா படைப்பினங்களுக்கும் இறைவனுக்கு இடையில் பரிந்துரைப்பவர் ஆவார் என்றும் உறுதி கொள்பவர்; வானத்தின் கீழ் அவருக்கு சமமான ஒரு ரஸுல் இல்லை. மேலும் திருக்குர்ஆனுக்கு சமமான ஒரு வேதமும் இல்லை. எவரும் நிரந்தரமாக உயிருடன் இருக்க வேண்டும் என்று இறைவன் விரும்பவில்லை. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த ரஸுல் நிரந்தரமாக உயிருடன் இருப்பவர் ஆவார். அவர் நிரந்தரமாக உயிருடன் இருப்பதற்காக இறைவன் ஓர் அடிப்படையை நிறுவினான். அதாவது அவரது ஷரீஅத்தையும் கியாமத் வரை தொடரச் செய்வான். அவரது ஷரீஅத்தும் ஆன்மீகமும் கியாமத் வரை நிலைத்திருக்கும்.

இறுதியில் அவரது இரண்டாவது ஆன்மீக அருளாக இந்த மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை உலகில் அனுப்பினான். அவர் வருவது இஸ்லாமிய கட்டடத்தை முழுமைப்படுத்துவதற்கு மிகவும் அவசியமாக இருந்தது. ஏனெனில் மூஸாவின் தொடரில் தரப்பட்டது போன்று முஹம்மதிய தொடருக்காகவும் ஆன்மீகமான முறையில் ஒரு மஸீஹ் வரப்படும் வரை இந்த உலகம் அழியாமல் இருப்பது அவசியமாக இருந்தது. இதனையே இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லஸீன அன்அம்த அலைஹிம் என்ற இந்த வசனம் சுட்டிக் காட்டுகிறது. நாமும் நமது சந்ததிகளும், வரக்கூடிய சந்ததிகளும், கியாமத் வரை வரக்கூடிய சந்ததிகளும் முஹம்மதிய மஸீஹை ஒப்புக் கொண்டவர்கள் ஆவோம். திருக்குர்ஆன் மீது உண்மையான முறையில் அன்பு கொண்டவாறு அதன் போதனையை தம்மீது போட்டுக் கொள்பவர்களாக அல்லாஹ் ஆக்குவானாக! அதன் பரக்கத்துகளில் இருந்து ஒவ்வொரு நொடியும் பலன் பெறுவார்களாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 16.12.2011**

Translated by : Muallim M. NIZAMUDDIN

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456